# 2021




**நிறுவனத்தின் பெயர்:**

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

**பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன் வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

**நிலையியற் கட்டளை இல 119(4) இன் கீழ் அரச கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

**பாராளுமன்ற கூட்டத் தொடர் இலக்கம் - 290**
**நிறுவனத்தின் பெயர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

| இல | அரச கணக்குகள் குழுவினால் அடையாளங்காணப்பட்ட குறைபாடுகள் | அடையாளங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதையநிலை |
|---|---|---|
| 01 | வெடி பொருட்களை வழங்குவதற்கான பதிவேடுகள் இதுவரை பேணப்படவில்லை. | துப்பாக்கி உரிமங்களின் பதிவேட்டுடன் இணைத்து குறித்த வெடி பொருட்கள் பதிவேடு பேணப்பட்டு வந்தது. எவ்வாறாயினும் வெடி பொருட்கனள வழங்குவதற்கான தனி பதிவேட்டினை பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இன்றைய திகதி வரை பதிவேற்றப்பட்டது. |
| 02 | 2024.05.11ந் திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல 171/2024 இன்படி, மென்பொருள் அமைப்பின் முதல், இரண்டாவது, மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்படவில்லை. | மென்பொருள் பொதியில் கடவுச் சொற்களை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 03 | 29.12.2016 ந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.30/2016 இன் 3.1ம் பந்தியின் பிரகாரம், மாவட்டச் செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வானது மீள் பரிசோதிக்கப் படவில்லை. | 2021ம் ஆண்டில் Covid தொற்று நிலைமை காரணமாக மாவட்டச் செயலகத்திற்கு சொந்தமான ஒரு சில வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வினை செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும் அடுத்து வந்த ஆண்டில் வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வானது மேற்கொள்ளப்பட்டது. |
| 04 | அனைத்து வாகனங்களுக்குமான உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் காணப்படவில்லை | • Truck WPLK-3264<br>• Land Cruiser CAP-4043<br>மேற்படி வாகனங்கள் தொடர்பாக, உலக உணவு வழிகாட்டும் குழுவானது யாழ்ப்பாண மாவட்ட செயலாளருக்கு உரிமையை மாற்றம் செய்வதற்கான அனுமதியினை வழங்கியுள்ளது. மேலதிக நடவடிக்கைகள் ஜனாதிபதி செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 05 | அனைத்து குழாம் வாகனங்களுக்கும் அரச சின்னமானது வர்ணம் பூசப்பட்டிருக்கவில்லை | அனைத்து குழாம் வாகனங்களிலும் அரச சின்ன வர்ணம் பூசப்பட்டுள்ளது |
| 06 | FR 94(I) இன்படி, வாக்குத் தலைப்பிற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டை பயன்படுத்தியதன் விளைவாக, ஆண்டு இறுதியில் ஒதுக்கீட்டை விட பொறுப்புக்கள் அதிகமாக இருந்தன | நாட்டின் பொருளாதார சூழ்நிலை காரணமாக எங்களால் சில செலவினங்களை ஏற்பாடுகளுக்கமைவாக நிர்வகிக்க முடியவில்லை. மேலும் அத்தகைய செலவினங்கள் அவசியமானவை. ஆகையால் நிதி அறிக்கையில் பொறுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. |

<table>
<tr><td>07</td><td>அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப்பட்டவர்களைத் தவிர அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமான பணியாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்</td><td>
<table>
<tr><td></td><td>அலுவலர்களின் வகை</td><td>மேலதிகம்</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>1</td><td>சிரேஷ்ட நிலை</td><td>-</td></tr>
<tr><td>2</td><td>3ம் நிலை</td><td>02</td></tr>
<tr><td>3</td><td>2ம் நிலை</td><td></td></tr>
<tr><td>4</td><td>1ம் நிலை</td><td>04</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>06</td></tr>
</table>
<u>3ம் நிலை - 02</u><br>ICTA – 2021.04.20 ஆம் திகதிய JK/EB/G/26 கடிதத்தின் மூலம் அமைச்சிடம் மேலதிக ஆளணியினை அனுமதிப்பதற்கான கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>1ம் <u>நிலை</u> - 04<br>அலுவலக சிற்றூழியர் ஆக அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.</td></tr>
<tr><td>08</td><td>நிறுவனத்தின் கணக்காய்வு பற்றிய மறுக்கப்பட்ட அல்லது சாதகமற்ற கருத்து</td><td>எதிர்காலத்தில் முனைப்பழியற்ற அபிப்பிராயத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது</td></tr>
<tr><td>09</td><td>அனைத்து அரச உத்தியோகத்தர்களும் தமது சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கவில்லை</td><td>எதிர்காலத்தில் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை உரிய நேரத்திற்குள் சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
</table>

**என்.எஸ்.ஆர்.சிவரூபன்,**
பிரதம கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்

என்.எஸ்.ஆர் சிவரூபன்
பிரதம கணக்காளர்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளருக்காக
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

**ம.பிரதீபன்,**
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் (பதில்)
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்

ம.பிரதீபன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்(பதில்)
யாழ்ப்பாண மாவட்டம்

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்